UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)
ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19 - 4 Oct - Dec 2025
Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கலித்தொகையில் அகமரபு வாழ்வியல்

**முனைவர் பா. நளினிப்ரியா**
**முனைவர் பொ. ராணி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்
கோயம்புத்தூர்

**முன்னுரை**

தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளையும் அனுபவங்களையும் அறிய நமக்குத் துணை செய்வது பழந்தமிழ் இலக்கியங்களே. அவற்றுள் 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' எனப் போற்றப்படுவது கலித்தொகை என்னும் நூலாகும். எட்டுத்தொகை நூல்கள் பெரும்பாலும் ஆசிரியப்பாவினால் அமைய கலித்தொகை மட்டும் கலிப்பாவால் சிறப்புப்பெற்றது. தமிழரின் அகமரபுகளை கலித்தொகை எடுத்துக்காட்டுகின்றது. இந்நூல் அன்பின் ஐந்திணைக்கான நூற்றைம்பது பாடல்களைக் கொண்டுள்ளது. கலித்தொகை கைக்கிளை. பெருந்திணைக்குரிய பாடல்களை அவற்றிற்குரிய துறைக் குறிப்புகளுடன் தெரிவிக்கின்றது. கலித்தொகையில் 56, 58 என்ற குறிஞ்சிக்கலியிலும் 112, 113 என்ற முல்லைக்கலியிலும் கைக்கிளைப் பாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன. குறிஞ்சிக்கலி 62ஆம் பாடலிலும் நெய்தல் கலி 142ஆம் பாடலிலும் பெருந்திணை பற்றியன காணப்பெறுகின்றன. இவற்றைப் போலவே 'மடலேறுதல், ஏறுதழுவுதல், போன்ற செய்திகள் பதிவாகியுள்ளன.

**முதன்மைச் சொற்கள்**

மடலேறுதல் - ஏறுதழுவுதல் - கொல்லேறு – களிறு – ஓம்பல் - இரங்கல் - புணர்தல்; - மகடூஉ.

**மகளிரின் மாண்பு**

கலித்தொகையில் மகளிரின் மாண்புகள் பல இடங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவர்களின் செயல்பாடுகள் ஒவ்வொன்றிலும் அவர்களின் மாண்புகள் வெளிப்படுகின்றன. கலித்தொகையில் அத்தகைய சூழல்கள் பெண்களுக்குச் சிறுவயது முதலே உருவாகி யுள்ளன. சங்க காலத்தில் பெண்களும் ஆண்களைப்போலவே அவர்களுக்கு நிகராக விளையாடுவதிலும் திருவிழாக்களில் கலந்து கொள்வதிலும் சிறப்புற்றிருந்தனர் என்பதை கலித்தொகை விளம்புகிறது. அக்கால மகளிர் பொம்மை வைத்து விளையாடியதை 'மடக்குறு மாக்களோடு ஓரை அன்ன' என்ற மருதக்கலி குறிப்பிடுகின்றது. பூக்களைக் கொய்து மாலையாகத் தொடுத்தும் பல இலைகளைக் கோர்த்தும் விளையாடிய சிறுமியரை கலித்தொகை காட்டுகின்றது.

**வீழ் ஊசல் தூங்கப் பெறின்**
**மாதை மடவான் பிணை இயல்வென்றாய் நின் ஊசல்** (கலி.131:11-12)

என்று நெய்தல்கலி எடுத்துரைக்கின்றது. பாங்காகப் பந்து விளையாடுதலும் சிற்றில் இழைத்தலும் சிறுமியர் விளையாட்டாக அமைகின்றன.

ஒத்த இயல்புடைய தலைவனுடன் தலைவி உடன்போக்குச்செல்ல இதனை அறிந்த செவிலித்தாயோ தன் மகளைத்தேடிச் செல்லுங்கால் வழியில் அந்தணர்களைச் சந்தித்துக் கேட்க, அவர்களோ,

**பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை**
**மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதான் என்செய்யும்?**
**நினையுங்கால் நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே;**
**சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை**
**நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதான் என்செய்யும்** (கலி:9:12-16)

என சாந்தம் பூசுபவர்களுக்கும் முத்து அணிபவர்களுக்கும் யாழ் இசை துய்ப்பவர் களுக்கும் இன்பந்தருமே அல்லாது பிறந்த இடத்திற்கு யாதொரு பயனும் இல்லை. அதுபோலவே உம் மகளும் உம்மால் பேணி வளர்க்கப்பட்டாலும் உரிய பருவத்தில் காதல் கொண்ட தலைவனுக்கே உரியவள் என உலகியலை வெளிப்படுத்துவதுபோல் களவொழுக்க மகளிரின் மாண்பினை கலித்தொகை வழி அறியமுடிகின்றது.

இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றி ல்லை என்னும் கூற்றிற்கிணங்க இல்லத்தரசி யாகத் தலைவனின் இன்பத்தில் மட்டுமல் லாது துன்பத்திலும் பங்கேற்கும் என்பததை

**ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை** (கலி.18)

என்றும்

**நின்னீர் அல்ல நெடுந்தாய் எம்மையும்**
**அன்பு அறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு**
**துன்பம் துணையாக நாடின் அதுவல்லது**
**இன்பமும் உண்டோ எமக்கு** (கலி.6)

என்றும் கலித்தொகைப்பாடல் கூறுவதிலிருந்து அக்கால மகளிரின் அன்பு நிலையை அறிய முடிகின்றது.

**ஏறுதழுவுதல்**

ஆயமகளிர் ஏறுதழுவிய வீரமிகு ஆடவரையே விரும்பி மணந்தனர் என்பதை முல்லைக் கலிப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. கொல்லேற்றை அடக்கிய வீர மறவர் களையே விரும்பி மணம் புரிந்ததை

**கடாஅக் களிற்றுனுங் கண்ணஞ்சாற்றை**
**விடாஅது நீ கொள்குவையாயிற் படாஅகை**
**யின்றன வாயாக டோள்** (முல்லைக்கலி.1)

என்ற அடிகளாலும்

**கொல்லேறு சாட விருந்தர்க்கெம் பல்லிருங்**
**கூந்த லணை கொடுப்போம் யாம்**
(முல்லைக்கலி.1)

என்ற அடிகளாலும் காணமுடிகின்றது. ஒருவனுக்கு ஒருத்தி என்பதே கலித்தொகை காட்டும் வாழ்வியல் நெறி. தலைவன் பரத்தையர் பிரிவால் பண்பு கெட்டபோது ஊடல் கொண்டு

**ஆமுனியா வேறுபோல் வைகற் பதின்மரைக்**
**காமுற்றுச் செல்வாயோர் கட்குத்திக் கள்வனை**
**நீ எவன் செய்தி பிறர்க்கு?** (மருதக்கலி.5)

என்று கூறுமிடத்துக் கள்வன் என்று இடித்துரைத்த பாங்குமுண்டு. தனது குழந்தை தந்தையுடன் மகிழ்ந்து விளையாடவேண்டும் என்பதற்காகத் தலைவனின் பண்பற்ற தன்மையைத் தனது தாய்மையால் வென்ற பாங்கினையும் கலத்தொகை காட்டுகிறது. குழந்தைக்கு அம்புலி காட்டி அமுதூட்டிய (கலி.80) அன்பின் ஊற்றும் பொறுமையின் பிறப்பிடமும் அல்லவா அவள்.

இல்லறம் ஒன்றையே நல்லறமாக மகளிர் கருதியமையால்தான் காரியம் யாவிலும் கைகொடுக்கும் காரிகையாக வலம்வந்தாள். ஆயர்குலமகளிர் கன்றுகளை மேய்த்ததோடு மாடுமேய்க்கும் தந்தைக்கும் தமையனுக்கும் உணவு கொடுத்தலையும், விழாக்காலத்தில் தெய்வங்கட்கு பால்மடை கொடுப்பதும், மகளிர் உலக்கை கொண்டு தினை மூங்கில் நெல் ஆகியவற்றைக் குத்தும்போது முருகனைப் பாடுவதைப்போல் வள்ளைப் பாட்டால் காதலனைப் பாடி மகிழ்ந்த பணியுமுண்டு.

இல்லறத்தில் விருந்தோம்பலைத் தலையாய அறமாகக் கருதி பெண்கள் வாழ்ந்ததால் அதற்குரிய பொருள் ஈட்டத் தலைவன் செல்லும் போது அவனது பிரிவையும் பரிவுடன் தாங்கிக் கொண்டனர். கற்புடைய பெண்டிருக்குக் கணவனே தெய்வம் என்ற நிலையில் கணவனைக் காப்பதற்கு இயற்கையை வேண்டி நின்றனர்.

**'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை'** (குறள்: 55)

என்ற குறள் வழி வாழ்ந்த பெண்கள் மாண்பினைக் கலித்தொகையிலும் காண முடிகின்றது. இவ்வாறு

**கற்பும் காலமும் நாற்பா லொழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்**
(தொல்.154)

என்ற தொல்காப்பிய நெறிப்படி கலித்தொகை காட்டும் மகளிர் கற்பில் அருந்ததியாய், ஒழுக்கத்தில் நல்லவர்களாய், விருந்தோம்பல் இல்லறத்தின் இயல்பு என்ற எண்ணம் மிக்கோராய், கணவனே கண்கண்ட தெய்வமாகக் கொண்டோராய். மாண்புறு மனைக்கு விளக்கமாய் அன்பே உருவாய் சுற்றம் சூழ அனைவரின் நலன் காக்கும்

பொறையுடைய மகளிராய்த் திகழ்தமையை அறியமுடிகின்றது.

**ஐந்நில ஒழுக்கம்**

**புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை**
**தேருங்காலைத் திணைக்குரிய பொருளே**
(தொல்.963)

என்னும் தொல்காப்பிய நூற்பா ஐந்த நிலத்திற்கான ஒழுக்கங்களைச் சுட்டிக் காட்டுகின்றது.

**பொய்யாக வீழ்ந்தேன் அவன் மார்பின் வாயாச் செத்து**
**ஒய்யென ஆங்கே எடுத்தனன் கொண்டான்**
(கலி.37: 15-16)

என்னும் பாடலடிகள் புணர்தலுக்கும்

**பொருள் நோக்குப் பிரிந்து நீ போகுதி எனக்கேட்பின்**
**மருள் நோக்கம் மடிந்து ஆங்கே மயில்கூர்கிற்பாள் மன்னோ**

என்னும் பாடலடிகள் பிரிதலுக்கும்

**அருநெறி ஆயர் மகளிர்க்கு**
**இருமணம் கூடுதல் இல்இயல்பு அன்றே**
(கலி.114:20-21)

என்னும் பாடலடிகள் இருத்தலுக்கும்

**நன்னுதாஅல்! காண்டை நினையா நெடி துஉயிரா**
**என் உற்றாள் கொல்லே? இஃது ஒத்தி பல்மாண்** (கலி.144:1-2)

என்னும் பாடலடிகள் இரங்கலுக்கும்

**எரிஇதழ் சோர்ந்து உகஏதிலாய்ப் புணர்ந்தமை**
**கரிகூறும் கண்ணியை ஈங்கு எம் இல் வருவதை** (கலி.78: 13-14)

என்னும் பாடலடிகள் ஊடலுக்கும் சான்றாக அமைகின்றன. அன்பின் ஐந்திணைகளான குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை என்பவை அன்பினது வெளிப் பாட்டினைச் சித்தரிக்கின்றன. மனித வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் நிலையற்றதாக உள்ளதையும் அது மாறி மாறி வந்து மனித வாழ்வை மேம்படுத்தும் என்ற கருத்துக்கள் பொதிந்துள்ளதையும் காணமுடிகின்றன.

**மடலேறுதல்**

மடல் என்பது பனைமடலால் குதிரை வடிவினதாகச் செய்யப்பட்ட உருவமாகக் கருதப்படுகிறது. காமம் மிக்க தலைவன் பனைமடலால் குதிரையைப் போல் ஓர் உருவம் செய்து அதன் கழுத்தில் மணி, ஆவிரை மாலை முதலியவற்றைப் பூட்டி அதன் மேலாக ஏறி ஊர்மன்றத்தே வருவான். இவன் தன் கையில் தான் காதலித்த பெண்ணின் உருவையும் தன் வடிவையும் படத்தில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். இவனது வருகையைக் கண்ட ஊர் மக்கள் இவனுக்கு இன்னவளொடு நட்பு உண்டு என்று அறியவே செய்தி எங்கும் பரவிப் பழிப்புக்கு இடமாகிறது. பின் தலைவியன் சுற்றத்தார் அத்தலைவனுக்கு அவளை மணமுடித்து வைப்பர். மடல் ஏறும் மரபானது ஆணிற்கு மட்டுமே உண்டு.

**எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்**
**பொற்புடை நெறிமை இன்மையான**
(தொல். 985)

என்ற நூற்பாவில் பெண்கள் மடலேறுதல் இல்லை என்ற கருத்து இடம்பெற்றுள்ளது.

**ஒறுப்பின் யான் ஒறுப்பது நுமரை யான்மற்று இந்நோய்**
**பொறக்கலாம் வரைத்து அன்றிப் பெரிதாயின் பொலங்கு**
**மறுத்து இவ்வூர் மன்றத்து மடல்ஏறி**
**நிறுக்குவென் போல்வல் யான் நீபடு பழியே**
(கலி.58:20-23)

என்னும் பாடலடிகளால் அறியமுடிகின்றது.

**முடிவுரை**

இவ்வாறாக கலித்தொகையில் இடம்பெற்ற பாடல்களைச் சான்றாகக் கொண்டு அக்கால மக்களின் அன்பு, வீரம், அறம் சார்ந்த வாழ்வியல் முறைகளையும் ஏறுதழுவதல் மடலேறுதல் ஐந்திணை நிலங்களுக்குரிய உரிக்பொருள் ஒழுக்கங்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது. காதலையும் வீரத்தை யும் இருகண்களாகப் போற்றிய தமிழர்களின் வாழ்வியல் அறங்களின் பல்வேறு கூறுகளையும் இது எடுத்துரைக்கின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. அறிஞர் ச.வே.சுப்பிரமணியன்(உரை), சங்க இலக்கியம், எட்டுத்தொகை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-18. 2010.
2. முனைவர் தமிழண்ணல், தொல்காப்பியம் பொருளதிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-18. 2009.
3. இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதாபதிப்பகம், சென்னை-14. ஐந்தாம் பதிப்பு-2017.
4. பாலசுப்பிரமணியன் கு.வெ.(உரை) - கலித்தொகை, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை-98. 2004.
5. ஞா. தேவநெயப் பாவாணர், திருக்குறள் எல்.கே.எம். கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், சென்னை-17. 2000.